DEPOSITION OF WITNESS
(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM
C.C.No.105/2026
PW - 2

| | | |
|---|---|---|
| Name | : | செந்தில்குமார் (Lw - 9) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 25.05.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம், காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2024 முதல் 2026ம் வருடம் வரை பேளுக்குறிச்சி காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தேன். இவ்வழக்கில் மற்றொரு புலன் விசாரணை அதிகாரியான சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.எம்.சண்முகம் என்பவரது கையொப்பம் எனக்கு நன்கு தெரியும்.

கடந்த 14.02.2026ம் தேதி 09.00 மணிக்கு பேளுக்குறிச்சி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.சண்முகம் என்பவர் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது இராசிபுரம் அரசு மருத்துவமைனையில் இருந்து கிடைக்கப்பெற்ற செல்வராஜ் என்பவரின் அடிதடி வழக்கு தகவலை பெற்று மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த வாதி செல்வராஜ்யை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று பின் நிலையம் வந்து நிலைய கு.எண்.14/2026, BNS 296(b), 329(4), 115(2), 351(3) பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசல் மற்றும் வாதியின் புகார் மனுவை இணைத்து கனம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பியும் பிற நகல்களை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி ஒரு நகலை தனது புலன் விசாரணைக்கு எடுத்துகொண்டார். **(**புகார் மனு அ**.**சா**.**ஆ**.3** ஆகவும்**,** முதல் தகவல் அறிக்கை அ**.**சா**.**ஆ**.4** ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது**.)**

கடந்த 14.02.2026ம் தேதி காலை 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று

சாட்சிகள் அனிஷ், சதாம்உஷேன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றார். **(**பார்வை மகஜர் அ**.**சா**.**ஆ**.5** ஆகவும் மாதிரி வரைபடம் அ**.**சா**.**ஆ**.6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.)** பின்னர் சாட்சிகள் செல்வராஜ், முருகேசன், சுப்ரமணி, சண்முகம், அனிஷ், சதாம்உஷேன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கின் எதிரி மாண்புமிகு நாமக்கல் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் அவர் இவ்வழக்கில் கைது செய்யப்படவில்லை. பின்னர் இவ்வழக்கில் மேல் விசாரணைக்காக வழக்கு கோப்புகளை எனது பார்வைக்கு வைத்தார்.

நான் வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 07.03.2026ம் தேதி வாதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.செந்தில்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றேன். **(**காயச்சான்றிதழ் அ**.**சா**.**ஆ**.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.சண்முகம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரி மீது BNS 296(b), 329(4), 115(2), 351(3) பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் சொல்லும் நாள் நேரத்தில் முதல் தகவல் அறிக்கை எதுவும் பதிவு செய்யவில்லை என்றும், வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றும், முன்விரோதத்தின் காரணமாக வாதி கொடுத்த பொய்யான புகாரின் பேரில் போடப்பட்ட வழக்கிற்காக ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**